02.03.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜம்சுதின் | | |
| த/பெ | முகமது இப்ராகிம் | | |
| கிராமம் | டி.எடப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூர் | வயது | 73 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து ஓய்வு பெற்று விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்தபோன அப்துல் ஜபாரை எனக்கு தெரியும். அவர் என்னுடைய உடன் பிறந்த தம்பி ஆவார். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். என் தம்பி காலையில் வழக்கம்போல் டி.எடப்பாளையம் கிராமத்தில் உள்ள தனது நிலத்தில் சிறிய வீடு கட்டி காலையில் அந்த வீட்டிற்கு சென்று விவசாயம் பார்த்துவிட்டு மீண்டும் தனது வீட்டிற்கு சென்று விடுவார். சென்ற 27.06.2018ந் தேதி காலை வழக்கம்போல் கொல்லையில் உள்ள தன் நிலத்திற்கு வந்தார். அப் போது எங்கள் கிராமத்தை சேர்ந்த நபிஜாகீர் உசேன், பக்ரூதின் மகன் அப்துல் மஜித், இவர்கள் நிலம் விற்றது, வாங்குவது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையை காலை 11 மணி முதல் 12 .30 மணி வரையில் பஞ்சாயத்து பேசி, சமரசம் செய்து வைத்துள்ளார். அதன் பின்பு எனது சின்னம்மா மகன் நபி பாஷா என்பவர் குன்னத்தூர் சென்று பிரியாணி வாங்கி வந்து சமார் 1.30 மணியளவில் எனது தம்பியிடம் கொடுத்துள்ளார். அதன் பின் பாஷா என்பவர் வீட்டிற்கு சென்றுள்ளார். மதியம் 2 மணி முதல் 2 .20 மணி வரையில் எனது தம்பியை அவரது வீட்டில் வைத்து பயங்கரமான ஆயுதங்களால் வெட்டி கொலை செய்துள்ளார்கள்.

மதியம் 2.25 மணிக்கு அவரது இரண்டாவது மனைவி ரொகாயாபீ என்பவர் என் தம்பி அப்துல் ஜபாருக்கு போன் செய்துள்ளார். என் தம்பி போன் எடுக்கவில்லை. ஆதலால் 2.30 மணியளவில் ரொகாயாபீ, நபி பாஷா என்பவருக்கு போன் செய்து உன் அண்ணன் போன் எடுக்கவில்லை என்று கேட்டுள்ளார். அதற்கு நபி பாஷா நான் 1.30 மணிக்கு அவருக்கு பிரியாணி பொட்டலம் கொண்டுபோய் கொடுத்துவிட்டு வந்தேன். அதன்பிறகு அவர் சாப்பிட்டுவிட்டு திருவெண்ணெய்நல்லூர் போவதாக சொன்னார் என்று தெரிவித்துள்ளார். அதன் பின் மாலை சுமார் 6.15 மணிக்கு மீண்டும் ரொகாயாபீ , நபி பாஷாவிடம் போன் செய்து 4,5 தடவை போன் போட்டேன் போன் எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார். அப்போது நபி பாஷா என்பவர் கொல்லைக்கு சென்று எனது தம்பி வீட்டிற்கு சென்று பார்த்துள்ளார். அப்போது எனது தம்பி அப்துல் ஜபார் பலத்த வெட்டுகாயங்களுடன் ரத்த வெள்ளத்தில் வீட்டு முன் குப்புற இறந்துகிடப்பதாக எனக்கு போன் மூலம் மாலை சுமார் 6.30 மணிக்கு தகவல் தெரிவித்தார். நான் உடனே என் குடும்ப நபர்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து என் தம்பி கொலையுண்டு கிடந்த அவர் வீட்டிற்கு சென்று பார்த்தேன். எனது தம்பியின் வலது பக்க தலை, வலது பக்க காதின் மேல்புறம், வலதுபக்க கழுத்து, இடதுமுழங்கை ஆகிய இடங்களில் பலத்த வெட்டுபட்ட ஆழ்ந்த காயங்கள் காணப்பட்டன. என் தம்பியின் பிரேதம் வீட்டினுள் தலைபாகம் தென்கிழக்காகவும், கால்கள் வடமேற்காகவும் உள்ள நிலையில் கிடந்தது. நான் புறப்பட்டு திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையம் சென்று இரவு 8 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். அதன் பின் நான் புகார் கொடுத்துவிட்டு என் தம்பியின் பிரேதம் கிடந்த வீட்டிற்கு வந்தேன். அன்று இரவு 9 மணிக்கு போலீசார் விசாரணையாக வந்தார்கள். வந்துபார்த்து பிரேதத்தை கைப்பற்றி பிரேத விசாரணை நடத்தினார்கள். பிரேத விசாரணையின் போது போலீசார் பிரேதத்தை மல்லாக்க போட்டார்கள். அப்போது வலது பக்க மார்பு, வலது பக்க வயிறு, ஆகியவைகளிலும், இடது பக்க மார்பு, இடது பக்க வயிறு ஆகிய இடங்களில் 6 குத்து காயங்கள் இருந்தது. பின்னர் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன். அதன் பிறகு இந்த வழக்கு சம்மந்தமாக

போலீசார் அடிக்கடி என்னை தொடர்பு கொண்டு எதிரிகள் சம்மந்தமாக எதாவது தகவல் உள்ளதா என்று என்னை விசாரணை செய்தார்கள். சென்ற 20.07.2018ந் தேதி நான் போலீசாரிடம் சென்ற 2017ம் ஆண்டு ஆடி மாதம் 18ந் தேதி மாலை 6.30 மணியளவில் திருக்கோவிலூர் பேருந்து நிலையத்தில் எங்கள் ஊரைச் சேர்ந்த மோகன் என்பவரின் அக்கா செல்வியின் மகன் சுபாஷ் என்பவரை முதலூர் கிராமத்தை சேர்ந்த கண்ணதாசன் கவுண்டர் மகன் கௌதம் என்பவரும், அவரின் பெரியம்மா மகன் சுரேஷ் என்பவரும் சேர்ந்தும் அடித்துள்ளார்கள். இந்த சம்பவம் தொடர்பாக சுபாஷ் என்பவர் எடப்பாளையம் காலனி வந்து சுபாஷ் என்பவரின் தாய் மாமன்கள் மோகன், ரவி, தாயார் செல்வி, தகப்பனார் முனியன் இவர்களிடம் விவரங்களை சொல்லியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மோகன் உறவினர்கள் மறுநாள் ஆடி 19ம் தேதி கார் ஓட்டுனர் செல்வத்துடன் சேர்ந்து முதலூரில் உள்ள கண்ணதாசன் வீட்டிற்கு சென்றும், கண்ணதாசன் மனைவி அம்பிகாவிடம் எங்கடி உன் மகன் என்று கேட்டு அசிங்கமாக திட்டியுள்ளார்கள். இந்த தகவல் தெரியவந்து என் தம்பி அப்துல் ஜபார் (கொலையுண்டவர்) என்பவர் கண்ணதாசன் வீட்டிற்கு வந்துள்ளார். அப்போது வயல்வெளியில் இருந்து வந்த கண்ணதாசன் மகன் கௌதம் என்பவரை வலுகட்டாயமாக மோகன் வகையறாக்கள் வலுகட்டாயமாக காரில் ஏற்ற முயற்சி செய்துள்ளார்கள். அப்பே பாது என் தம்பி அப்துல் ஜபார் குறுக்கிட்டதன் பேரில் இருதரப்பிற்கும் தகராறு ஏற்பட்டு கௌதமன் என்பவரை அங்கேயே விட்டுவிட்டு வந்துள்ளார்கள். பின்னர் என் தம்பி நேராக எடப்பாளையம் காலனிக்கு சென்று மாரியம்மன் கோவில் எதிரில் நின்றுகொண்டு காலனி முக்கியஸ்தரான கண்ணன், பாவாடை, குப்புசாமி மற்றும் ஊர் நாட்டாமை, முகமதுஷேரிப் என்கிற மோம்பாய் இவர்களை அழைத்துள்ளார். இவர்கள் நான்கு பேரும் அங்கு வந்து என் தம்பியை பார்த்துள்ளார்கள். அப்போது முதலூரில் நடந்த சம்பவத்தை பற்றி அவர்களிடம் சொல்லியுள்ளார். இதற்கு விசாரித்து எனக்கு நியாயம் சொல்லவேண்டும் என்றும் கேட்டுள்ளார். அதற்கு நான்கு பேர்களும் ரவி, மோகன் அவருடைய அப்பா ரங்கசாமி இவர்களை அழைத்து விசாரித்து நியாயம் கேட்டுள்ளார்கள். அப்போது ரவி என்பவர் என் தம்பியிடம் நீ என்ன நியாயம் கேட்பது உன் வேலையை பார்த்து போ

என்று ஒருமையில் பேசியுள்ளார். அப்போது என் தம்பி திருட்டு மணல் அடித்து காசு சம்பாதித்துவிட்டு திமிராக பேசுகிறாயா என்று கேட்டுள்ளார். அப்போது ரவி நீ தான் எங்கள் மணல் லாரியை அடிக்கடி போலீசில் தகவல் சொல்லி மாட்டிவிடுகிறாய். நீ இரண்டு லாரியை பிடித்து கொடுத்தால் இன்னும் இரண்டு லாரி வாங்கி மணல் ஓட்டுவோம் என்று சொல்லி என் தம்பியை பிடித்து தள்ளியுள்ளார். இதனால் கோபப்பட்ட என் தம்பி முக்கியஸ்தர்களிடம் எனக்கு சரியான நியாயம் கிடைக்காமல் விடமாட்டேன் என்று சொல்லி கிளம்பி வந்துள்ளார். அன்று மாலை இந்த சம்பவம் தொடர்பாக என்னிடம் என் தம்பி சொன்னார். நான் என் தம்பியிடம் முன்புபோல இப்போது சின்னவர்கள் பெரியவர்கள் என்ற மரியாதை கிடையாது என்று சொல்லி சமாதானம் செய்து அனுப்பினேன். பிறகு இரண்டு நாட்கள் கழித்து மேற்கண்ட ஊர் முக்கியஸ்தர்கள் மோகன், ரவி அவருடைய தகப்பனார் இவர்களுக்கு அறிவுரை வழங்கி என் தம்பி அப்துல் ஜபாரிடம் மன்னிப்பு கேட்க வைக்க அவர் நிலத்திலுள்ள கொட்டகைக்கு அழைத்து சென்றுள்ளனர். அப்பே பாது மோகன், ரவி, ரங்கசாமி ஆகியோர் மன்னிப்பு கேட்டுள்ளனர். அதன் பிறகு மோகன் வகையறாவினர் எங்களை மன்னிப்பு கேட்கவைத்து அசிங்கப்படுத்திவிட்டதாகவும், சந்தர்ப்பம் கிடைத்தால் இவரை விடமாட்டோம் என்றும் ஊரில் பேசிவந்துள்ளார்கள். இந்த சம்பவத்திற்கு பிறகு மோகன், ரவி வகையறாவினர் மீது தொடர்ந்து மணல் கடத்தல் சம்மந்தமாக பல காவல் நிலையங்களில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இதனால் என் தம்பி தான் அவ்வப்போது போலீசுக்கு தகவல் கொடுத்து வழக்கு போடுவதாக அவர்களுக்கு என் தம்பி மீது பகை உணர்வு அதிகமாகிவிட்டது. என் தம்பி கொலையுண்ட 27.06.2018ந் தேதி காலை மோகன் வீட்டிற்கு புதியதாக ஒரு நபர் வந்ததாகவும், அன்று மதியம் சுமார் 1.30 மணியளவில் மோகன், கார் ஓட்டுனர் செல்வம், ரவி, புதியதாக வந்த நபரும், வீரன் கோவில் அருகே வந்து நின்று பேசிக்கொண்டு இருந்ததாகவும், அதன் பின் என் தம்பி கொலையுண்ட வீட்டின் பின்புறம் உள்ள கரும்பு தோட்டத்தின் வரப்பு வழியாக ரவியும், புதியதாக வந்த நபரும் வேகமாக நடந்து சென்றதாகவும், ஊரில் சிலர் சொல்ல கேட்டேன். இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

நான் இந்த சூழ்நிலையில் அடிப்படையில் அவர்கள் தான் என் தம்பியை கொலை செய்திருப்பார்கள் என காவல் துறையில் மறுவாக்குமூலம் கொடுத்தேன்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

நான் காவல் துறையில் 37 ஆண்டுகளாக பணி புரிந்து வந்தேன். நான் பணி ஓய்வு பெறும்போது சிறப்பு உதவி ஆய்வாளராக பணி ஓய்வு பெற்றேன். எனக்கு சம்பவம் குறித்து பாதிக்கப்பட்டவர் புகார் கொடுத்தற்கும், அதே போல் ஒரு காவல் துறை அதிகாரி சிறப்பு தனி அறிக்கை மூலம் புகார் கொடுப்பதற்கும், தகவல் அளிப்பவர் தரும் தகவலுக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். நானோ, என் தம்பியோ மணல் கடத்தலை பார்த்தோம் என்று புகார் எதுவும் கொடுக்கவில்லை. நாங்கள் இருவரும் பணி ஓய்வு பெற்றபிறகு காவல் துறை தகவல் அளிப்பவர்களாக (Informer) இல்லை. எதிரிகள் மீது போடப்பட்ட மணல் வழக்குகள் எதிலிலும் நானோ, என் தம்பியோ சாட்சிகள் இல்லை. இறந்துபோன என் தம்பி ஜபாருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். என் அப்பாவிற்கும், என் தாத்தாவிற்கும் எந்த சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல என் தாத்தாவிற்கு எடப்பாளையம் கிராமத்தில் 10 ஏக்கர் சொத்துக்கள் இருந்தது. என் அப்பா உயிருடன் இருக்கும்போதே அந்த சொத்துக்களை நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டோம். எனக்கும், என் தம்பிக்கும் என் அண்ணனுக்கும், என் அப்பா உயிருடன் இருக்கும்போதே 1981ல் பாகபிரிவினை ஆகிவிட்டது. என் தம்பி ஜபாருக்கு மூத்த மனைவி நான்கு குழந்தைகளுடன் என்.ஜிஜிஓ காலனியில் வசித்து வருகிறார். அது போன இரண்டாவது மனைவி ரொகாயபீ திருக்கோவிலூர் செவலை ரோட்டில் கற்பக நகரில் வீடு கட்டி கொடுத்துள்ளார். நான் குடியிருக்கும் வீட்டிற்கும், என் தம்பி ஜபார் குடியிருக்கும் வீட்டிற்கும் இடையே சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். என்னை காவல் துறை விசாரித்த போதோ, அல்லது புகார் கொடுத்த போதோ என் தொலைபேசி எண்ணை கொடுத்தேன். புகார் கொடுத்த போது நான் தான் எனது தொலைபேசி எண்ணையும், என் தம்பியின் தொலைபேசி எண்ணையும் கொடுத்தேனா என்றால் நான் எனது தொலைபேசி எண்ணை மட்டுமே கொடுத்தேன். என் தம்பியின் தொலைபேசி எண்ணை கொடுக்கவில்லை. கௌதமன் சம்மந்தமான சம்பவம் குறித்து பஞ்சாயத்து

நடந்தபோது எனக்கு நேரில் எதிலும் தொடர்பு இல்லை. நான் கொடுத்த புகாரிலாவது , அல்லது என்னை விசாரித்த போதாவது என் தம்பி வந்து என்னை தொடர்பு கொண்டதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மறுவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். முதல் வாக்குமூலம் வாங்கியதற்கும்,. மறுவாக்குமூலம் வாங்கியதற்கும் இடையில் தோராயமாக சுமார் 25 நாட்கள் கால இடைவெளி இருக்கும். ஒரு புகார் புலன் கொள்ளக்கூடிய குற்றமாக இருந்தால் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். அப்படி முதல் தகவல் அறிக்கை பதியப்படும்போது பிரிவு 154(2)ன் படி யார் புகார் கொடுக்கிறாரோ அவரிடம் கையெழுத்து வாங்கி அவருக்கு நகல் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். அது போன்று எனக்கு புகார் கொடுத்தபோது நகல் வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அச்சு முதல் தகவல் அறிக்கையில் காலம் 14ல் எனது கையொப்பம் எங்கும் பெற்றதாக இல்லை என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் காலம் 14 எ.சா.ஆ.1 ஆகும். அன்று என் பெரியம்மா மகன் ரவி பாஷா எனக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சம்பவத்தை பற்றி தெரிவிக்கும்போது மணி சுமார் மாலை 6.28 அல்லது 6.30 மணி இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு நான், எனது குடும்ப உறுப்பினர்கள் செல்வதற்கு முன்பே காவல் துறையினர் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் அந்த வீட்டிற்கு சென்று சுமார் 1/2 மணி நேரம் இருந்தேன். நான் கொடுத்த புகாரில் என் தம்பியை முன்விரோதம் காரணமாக யாரோ வெட்டி கொடூரமான முறையில் கொலை செய்தார்கள் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் சென்று பார்க்கும் போது போலீசார் அந்த இடத்தை வீடியோ எடுத்தார்கள், புகைப்படகாரர்ககள் புகைப்படம் எடுத்தார்கள். கைரேகை பதிவுகளை கைப்பற்றினார்கள். அதே போல் மோப்பநாய் வரவழைக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. அங்கு தரையிலும், சுவரிலும் இரத்தகறை இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு பக்கத்தில் ஜாக்கெட் ஒன்று இருந்தது என்றால் நான் பார்க்கவில்லை. நானும், ஜபாரின் மனைவி வகாயாபீ, நபிபாஷா உட்பட யாருமே ஜபாரின் இரத்தக்கறை படிந்த உடலை தொட்டுக்கூட பார்க்கவில்லை என்றால் சரிதான். தடயங்கள் பாதிக்கும்

என்று தொடவில்லை. இறந்தவரின் மனைவிகள் இருவரும் இருக்கும் நிலையில் நான் போய் புகார் அளிக்க வேண்டிய அவசியம் என்ன என்றால் அவர்கள் இருவரும் படிக்காதவர்கள். நான் தான் போய் புகார் அளிக்க வேண்டும் என்று முடிவு எடுத்தேன். சட்டம் தெரியாது என்ற வாதத்தை வைத்து ஒரு நபர் தப்பித்துக்கொள்ள முடியாது என்ற விவரம் எனக்கு தெரியும். என் தம்பி ஜாபரும், நானும் காவல் துறையில் இருந்ததால் அதை வைத்துக்கொண்டு தனித்தனியாக மிரட்டி பணம் பறிப்பது தான் எங்கள் தொழில் என்றால் தவறு, சரியல்ல. என் தம்பிக்கு பஞ்சாயத்து செய்வது தான் வேலை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது வாக்குமூலத்தில் என் தம்பி பக்ரூதின் மகன் அப்துல்மஜித் என்பவருக்கும், நபீர் ஜாகீர் உசேன் என்பவருக்கும், 27.06.2018ந் தேதி காலை சுமார் 11 மணியிலிருந்து மதியம் சுமார் 12.30 வரை நிலம் விற்றது சம்மந்தமாக பஞ்சாயத்து பேசி அனுப்பியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஆடி 19ந் தேதி நடந்ததாக சொல்லப்படும் கடத்தல் சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதலூரில் நடந்த சம்பவம் தொடர்பாக நான் நேரடியாக பங்கேற்கவில்லை. முதலூரில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் குறித்தும் காவல் துறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அவர்கள் சம்பவம் தொடர்பாக மன்னிப்பு கேட்டுவிட்டதால் புகார் கொடுக்கவில்லை என சாட்சி தாமாக கூறுகிறார். அதுபோன்று மன்னிப்பு கேட்டதாக கூறுவது பொய் என்றும், அது போன்று சம்பவமே நடைபெறவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. 5ம் எதிரியை தவிர மற்ற எதிரிகள் அனைவரும் பட்டியல் இனத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மோகனும், ரவியும் மிகவும் கஷ்டப்பட்டு லாரி வாங்கி தொழில் நடத்திவந்த நிலையில் எங்களது தூண்டுதல் காரணமாகத்தான் காவல் துறையில் அவர்கள் மீது மணல் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. என் தம்பி காவல் துறையில் இருந்த செல்வாக்கை வைத்துக்கொண்டு கட்டப்பஞ்சாயத்து செய்வது மட்டும்அல்லாமல் இதுபோன்று சமூகத்தின் அடித்தட்டில் இருந்துவந்து ஒரு தொழில் செய்பவர்கள் தனக்கு சாதகமாக இல்லாமல் இருந்ததால் அவர்கள் மீது நாங்கள் விரோதம் வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது போடப்பட்ட மணல் வழக்குகள் எதிலும், தற்போது வரை விசாரணை

முடியவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. ஜபாருக்கு கட்டப்பஞ்சாயத்து பேசியவகையில் அங்கு அவருக்கு பல விரோதிகள் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கு ஜபாருக்கு பல விரோதிகள் இருப்பது தெரியும் என்றும், ஆனால் நான் அதை தெரிந்துக்கொண்டே எதிரிகள் திட்டமிட்டு இந்த வழக்கை ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பிறகு என்னை விசாரிக்க சம்மன் எதுவும் கொடுக்கவில்லை. அந்த வீட்டிற்குள் உள்ள ரேகையை ஒப்பிட்டு பார்ப்பதற்கு என்னிடமும், நபிபாஷா, காலையில் பஞ்சாயத்திற்கு வந்தவர்கள் ஆகியவர்களிடம் ரேகை எடுக்கப்பட்டது என்றால் என்னிடம் ரேகை எடுக்கப்படவில்லை. என்னிடமும் ரேகை எடுத்தார்கள் என்றும், அதை ஒப்புக்கொண்டால் கொலைக்கு காரணம் யார் என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் நான் ரேகை எடுக்கவில்லை என மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை இரண்டு முறை விசாரித்தபோது அதை எழுதியவர் யார் என்றால் என்னை விசாரித்தது ஆய்வாளர் திரு.ஜோகிந்தர். அதை கணினியில் உதவியாளர் ஒருவர் தட்டச்சு செய்தார். அவரின் பெயர் தெரியாது. லேப்டேப்பில் தான் தட்டச்சு செய்தார்கள். தட்டச்சு செய்ததை நான் படித்துபார்த்தேன். கணினியில் தட்டச்சு செய்தவர் அதில் கையெழுத்து போட்டாரா என்று எனக்கு சரியாக தெரியவில்லை. நான் சொல்வது போல சொன்ன விதத்தில் எனக்கு தகவலும் வரவில்லை என்றும், நான் சென்று பார்க்கவில்லை என்றும், காவல் துறையில் சொன்ன விதத்தில் புகார் அளிக்கவில்லை என்றும், என்னை விசாரிக்கவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. நான் என் தம்பியின் செல்போனை வீட்டிற்கு சென்ற போது அங்கு இருந்ததா என்று பார்த்தேனா என்றால் இல்லை. அங்கு போன் இருந்ததா என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் அலைபேசி எண். வேறு ஒரு பேனாவால் வேறு கையெழுத்தால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட கைரேகைகள், புகைப்படங்கள், வீடியோ ஆதாரங்கள், கைப்பற்றப்பட்ட அப்துல் ஜபாரின் செல்போன் இவைகளை முறைப்படி புலன் விசாரணை செய்திருந்தால் எதிரிகளுக்கும், வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்பது தெரிந்திருக்கும் என்றும், காவல் துறையில் எங்களுக்கு இருந்த செல்வாக்கு, பணம் பலம்

வைத்து பட்டியல் இனத்தை சார்ந்தவர்கள் மீது அவர்கள் நல்ல முறையில் சட்டப்படி தொழில் செய்து பிழைக்கிறார்கள் என்ற காழ்புணர்ச்சியில் என் தம்பி ஜபார் சொன்னது போல் எதிரிகள் கேட்கவில்லை என்பதால் எனக்கு காவல் துறையில் இருந்த அனுபவத்தை வைத்து எதிரிகள் மீது வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல தவறு. ஜபாரின் இறப்பிற்கே எதிரிகள் வந்து இருந்தார்கள் என்றால் சரியல்ல . நான் திட்டமிட்டு எதிரிகளை சொன்னதின் பேரில் காவல் நிலையத்தில் எதிரிகளை சட்டவிரோத காவலில் வைத்து அவர்களை சித்தரவதை செய்து அதன் பிறகு இந்த பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>1,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

2016ம் ஆண்டு பொது தேர்தலில் போட்டியிட நானும், மனு செய்தேன். 1ம் எதிரியும் மனு செய்தார் என்றால் நான் மனு தாக்கல் செய்தேன். 1ம் எதிரி தாக்கல் செய்தாரா என்று எனக்கு தெரியாது. நான் பணி ஓய்வு பெற்று 2011 முதல் 2016 வரை டி.எடப்பாளையம் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன் என்றால் சரிதான். 2016ல் தேர்தல் அறிவித்தார்கள் என்றும், அப்போது எனக்கு போட்டியாக என்னுடன் 1ம் எதிரி மோகனும் மனு தாக்கல் செய்தார் என்றும் இந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் வேண்டும் என்றே அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் 2018ல் எத்தனை பேர் மனு தாக்கல் செய்தார்கள் என்றால் இரண்டு பேர் தாக்கல் செய்தது தெரியும். 1ம் எதிரி தாக்கல் செய்தாரா என்று எனக்கு தெரியாது. அதன் பின்பு 2021ல் தேர்தல் அறிவித்தார்கள். அப்போது மோகனும் வேட்பு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த தேர்தல் முடிவில் எனக்கு வைப்பு தொகை கூட கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. டி.எடப்பாளையம் ஊராட்சி தொகுதி பொது தொகுதி என்றால் சரிதான். இதற்கு முன்பு அங்கு ஒடுக்கப்பட்ட ஜாதியான ஆதிதிராவிடர் இனத்தை யாருமே அங்கு போட்டியிடவில்லை என்றால் சரிதான். முதல் தலைமுறையாக அங்கு மோகன் வந்து போட்டியிட்டார் என்றும், நான் அவரை போட்டிபோடக்கூடாது வாபஸ் வாங்குங்கள் என்று நிர்பந்தம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் மோகனிடம் நீங்கள் நின்றால் ஆதிதிராவிடர் வாக்குகள் பிரிந்து விடும் நான் வெற்றி பெற முடியாது வாபஸ்

வாங்குங்கள் என்று கேட்டேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றவுடன் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கவில்லை. என் தம்பியின் இரண்டாவது ரொகயாபீ முதல் திருமணத்தின் போது முதல் கணவரை முறையாக விவாகரத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜாகீர் உசேனும், நபிபாஷாவும், சொந்த உடன்பிறந்த சகோதர்கள் என்றால் சரிதான். வார்டு மெம்பர் கண்ணன் மற்றும் அவரது மகன் வீரன் இருவரும் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர்கள் தான் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் எடப்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவர் தான் எங்கள் தம்பியின் நிலத்தில் ஏற்கனவே வேலை செய்து வந்தார்கள் என்றால் சரிதான். தற்போது ஜபார் இறந்ததற்கு பிறகு அவரது நிலத்தை யார் குத்தகைக்கு அனுபவித்து வருகிறார்கள் என்றால் கண்ணன் அனுபவித்து வருகிறார். எடப்பாளையம் காலனி கோவில் நிர்வாகத்தில் கண்ணனும், வீரனும் இருந்தார்கள் என்றால் சரிதான். 2016ல் அந்த கோவில் நிர்வாகத்தின் பணத்தை அவர்கள் கையாடல் செய்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மோகனும், அந்த நிர்வாகத்தில் ஒரு உறுப்பினர் என்றால் இருக்கலாம், அது குறித்து எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கும், எனது வீட்டிற்கும் உள்ள இடைவெளி தூரம் சுமார் 1 பர்லாங் இருக்கும். சம்பவ இடத்திற்கு நான் போன பிறகும் மற்றும் புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரித்தார்கள். அப்படி விசாரித்த போது நான் 10 பேரை குறிப்பிட்டு சொன்னேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு நபிபாஷா இருந்தார் மற்றும் ஊர் பொதுமக்கள், உறவினர்கள் இருந்தார்கள் என்றால் நபிபாஷா மட்டும் தான் அங்கு இருந்தார். நான் சென்ற பிறகு அங்கு ஊர்க்காரர்கள் வந்தார்கள். அதில் மோகனும் வந்திருந்தார். நான் பதறிப்போய் விழுந்தபோது மோகன் என்னை தாங்கிபிடித்தார் என்றால் சரியல்ல. ஜபார் மருமகள் ஜலீல் மனைவி மயக்கம்போட்ட போதுகூட மோகன் தான் தண்ணீர் எடுத்துவந்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அங்கு யார் யார் இருந்தார்கள், யார் யார் வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. கொலை நடந்ததாக சொல்லப்படும் சம்பவ வீட்டையும், ஆதிதிராவிடர் பகுதியையும் சித்தலிங்கமடம் சாலை தான் பிரிக்கிறது என்றால் சரிதான். அது போல

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு மிக அருகில் வீரன் கோவில் உள்ளது என்றால் 150 மீட்டர் தொலைவில் உள்ளது. அங்கு ஒரு குளமும் உள்ளது. இந்த சித்தலிங்கமடம் சாலை வழியாக தான் கிராம நிர்வாக அலுவலகம், பள்ளிக்கூடம், வங்கி, கூட்டுறவு வேளாண்மை வங்கி ஆகியவற்றிற்கு எடப்பாளையத்திலிருந்து செல்வார்கள் என்றால் சரிதான். அதே போல் ஆதிதிராவிடர் மக்களும், எடப்பாளையம் மக்களும் கழிவறைக்கு அந்த குளத்தை தான் பயன்படுத்துவார்கள் என்றால் சரியல்ல. ஆனால் குளம் இருக்கும் இடத்தை தான் ஆடு, மாடு மேய்ப்பதற்கு பொது மக்கள் பயன்படுத்துவார்கள் என்றால் தண்ணீர் காட்டுவதற்கு பயன்படுத்துவார்கள். அதே போல் போலீஸ் விசாரணையில் பல கோணங்களில் விசாரித்தார்கள் என்றால் ஜபாரின் பல முன்விரோதங்கள் குறித்து போலீசார் விசாரித்தனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. காவல் துறையினர் பல கோணங்களில் விசாரித்தனர் என்றால் சரிதான். எங்கள் வீட்டின் முன்பு வீடு கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் போது என்னுடன் என் தம்பி பிரச்சனை செய்து அது ஜமாத் வரை சென்றது என்றால் சரியல்ல. எங்கள் வீட்டின் முன்னாடி கடக்கால் போட்டு அதற்கு மேல் நான் கட்டுமானப்பணியை நான் தொடரவில்லை என்றால் சரியல்ல. அந்த இடம் ஜபாருக்கு சொந்தமான இடம் என்றும், இது சம்மந்தமாக எங்கள் இருவருக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. அவர் எழுதிக்கொடுத்துவிட்டார். அது பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். நபிபாஷா தம்பி ஜாகீர் உசேனுக்கும், அப்துல்மஜித்துக்கும் தான் நிலத்தகராறு இருந்தது என்றால் சரிதான். 27.06.2018ந் தேதியில் நபிபாஷா தம்பி ஜாகீர் உசேனுக்கும், அப்துல்மஜித்திற்கும் என் தம்பி பஞ்சாயத்து செய்தார் என்றால் சரிதான். இந்த பஞ்சாயத்தில் என்ன விவரம் பேசப்பட்டது யார் என்ன பேசினார்கள் என்ற விவரம் நேரடியாக எனக்கு தெரியாது. அதே போன்று நபிபாஷா பிரியாணி வாங்கி கொடுத்தார் என்பதும், அதன் பிறகு என் தம்பி திருவெண்ணெய்நல்லூருக்கு சென்றார் என்ற விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது. ஆஜர் எதிரிகள் 5 பேரையும் கைது செய்த பிறகு என்னை கூப்பிட்டு வந்து அடையாளம் காட்டினார்கள் என்றால் சரியல்ல, நான் பார்க்கவில்லை. முதலூரில் இருக்கும் சுரேசோ, கௌதமோ, சுபாசோ, எனக்கு

உறவினர்கள் இல்லை என்றால் சரிதான். என்னை போன்றே எனது தம்பியும் ஒரு ஓய்வு பெற்ற காவல் உதவி ஆய்வாளர் தான் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் பிரேத விசாரணைக்கு சாட்சியாக இருந்தேன் என்றால் சாட்சியாக இல்லை. எதாவது உறவினர்களுக்கு பிரச்சனை என்று வந்தால் சம்பவ இடமான கொல்லை வீட்டில் தான் பஞ்சாயத்து நடைபெறும் என்றால் இல்லை, உறவினர்கள் மட்டும் அப்படி வருவார்கள். திருக்கோவிலூரிலும் பஞ்சாயத்து செய்வார். நபிபாஷா போன் செய்யும் போது நான் வீட்டில் இருந்தேன். சம்பவம் நடந்த பிறகு மோகனை பல முறை காவல் துறையினர் கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிரிகளை குறித்து என்னிடம் காவல் துறையினர் குறிப்பாக கேள்விகள் கேட்டார்கள் என்றால் சரியல்ல. நான் இரண்டு முறை வாக்குமூலம் கொடுத்த போதும் சந்தேகத்தின் அடிப்படையில் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஒரு முறை தான் அப்படி கொடுத்துள்ளேன். உழைப்பை உயர்வாக எண்ணி சமூதாயத்தில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் மோகன் சமூதாயத்தில் தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. சமூக அக்கறையுள்ள நபராக ஒரு ஜனநாயக தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற நோக்கத்தில் எனக்கு எதிராக போட்டியிட்டார் என்றால் சரியல்ல. எனக்கு எதிராக தேர்தலில் போட்டியிட்டார் என்றும் அதே போல் என் தம்பி பல கட்டபஞ்சாயத்துகளில் ஈடுபட்டார் என்றும், அதை கேள்விகேட்கும் ஒரு நபராக அவர் இருந்தார் என்றால் சரியல்ல. எனவே அவர் மீது பொய்யாக இந்த வழக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், எனது தம்பிக்கும் இடம் பிரச்சனை ஏற்பட்டு அதில் எனது தம்பியின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி ஜமாத் வலியுறுத்தினார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அதே போல் த.மூ.மூ.க கட்சியை சார்ந்த சேக் உசேன் என்பவரை எனக்கு தெரியும். த.மூ.மூ.க கட்சியை சேர்ந்தவர்கள் நாங்கள் பல பிரச்சனை செய்து வருகிறோம் இஸ்லாமியர்களுக்கு எதிராக இருக்கிறோம் என்று கூறி எங்களுக்கு எதிராக ஆர்பாட்டம் நடத்தினார் என்றால் இல்லை. மாலை சுமார் 6.15 மணிக்கு மீண்டும் ரொகாயாபீ , நபி பாஷாவிடம் போன் செய்து 4,5 தடவை போன் போட்டேன் போன் எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார் என்ற விவரத்தை நான் காவல் துறை

விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் நான் புறப்பட்டு திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையம் சென்று இரவு 8 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்கிற விவரத்தை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. அதே போல் 2017ம் ஆண்டு ஆடி மாதம் 18ம் தேதி மாலை 6.30 மணியளவில் திருக்கோவிலூர் பேருந்து நிறுத்ததில் என்ற விவரத்தை நான் காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன்.

**<u>2ம் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணையில் கீழ்கண்ட பகுதியை 1,4 எதிரிகள் தமதாக ஏற்றுக்கொண்டார்கள்.</u>**

கௌதமன் சம்மந்தமான சம்பவம் குறித்து பஞ்சாயத்து நடந்தபோது எனக்கு நேரில் எதிலும் தொடர்பு இல்லை. எனக்கு புகார் கொடுத்தபோது நகல் வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அச்சு முதல் தகவல் அறிக்கையில் காலம் 14ல் எனது கையொப்பம் எங்கும் பெற்றதாக இல்லை என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் காலம் 14 எ.சா.ஆ.1 ஆகும். நான் கொடுத்த புகாரில் என் தம்பியை முன்விரோதம் காரணமாக யாரோ வெட்டி கொடூரமான முறையில் கொலை செய்தார்கள் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் சென்று பார்க்கும் போது போலீசார் அந்த இடத்தை வீடியோ எடுத்தார்கள், புகைப்படகாரர்ககள் புகைப்படம் எடுத்தார்கள். கைரேகை பதிவுகளை கைப்பற்றினார்கள். அதே போல் மோப்பநாய் வரவழைக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. அங்கு தரையிலும், சுவரிலும் இரத்தகறை இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டிற்குள் உள்ள ரேகையை ஒப்பிட்டு பார்ப்பதற்கு என்னிடமும், நபிபாஷா, காலையில் பஞ்சாயத்திற்கு வந்தவர்கள் ஆகியவர்களிடம் ரேகை எடுக்கப்பட்டது என்றால் என்னிடம் ரேகை எடுக்கப்படவில்லை. இந்த வழக்கில் சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட கைரேகைகள், புகைப்படங்கள், வீடியோ ஆதாரங்கள், கைப்பற்றப்பட்ட அப்துல் ஜபாரின் செல்போன் இவைகளை முறைப்படி புலன் விசாரணை செய்திருந்தால் எதிரிகளுக்கும், வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்பது தெரிந்திருக்கும் என்றும், காவல் துறையில் எங்களுக்கு இருந்த செல்வாக்கு, பணம் பலம், வைத்து பட்டியல் இனத்தை சார்ந்தவர்கள்

மீது அவர்கள் நல்ல முறையில் சட்டப்படி தொழில் செய்து பிழைக்கிறார்கள் என்ற காழ்புணர்ச்சியில் என் தம்பி ஜபார் சொன்னது போல் எதிரிகள் கேட்கவில்லை என்பதால் எனக்கு காவல் துறையில் இருந்த அனுபவத்தை வைத்து எதிரிகள் மீது வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல தவறு. நான் திட்டமிட்டு எதிரிகளை சொன்னதின் பேரில் காவல் நிலையத்தில் எதிரிகளை சட்டவிரோத காவலில் வைத்து அவர்களை சித்தரவதை செய்து அதன் பிறகு இந்த பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் பணியிலிருந்த போது திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தேன் என்றால் சரிதான். நான் ஆய்வாளராக இருந்து அதன் பிறகு பணி குறைப்பு செய்யப்பட்டு உதவி ஆய்வாளராக மாற்றப்பட்டேன் என்றால் சரிதான். நான் காவல் துறை வாக்குமூலத்தில் என் சமூகத்தில் அவருக்கு யாரும் முன்விரோதம் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான், எனது உறவினர்கள் மற்றும் இறந்துபோனவரின் இரண்டாம் மனைவி ரொகாயாபீ மற்றும் உறவினர்கள் வந்துவிட்டனர் என்றால் சரிதான். நான் அவரது இரண்டாம் மனைவியிடம் நீங்கள் புகார் கொடுங்கள் என்று கேட்டேனா என்றால் கேட்டேன். அவர்களுக்கு விவரம் தெரியாததால் என்னை கொடுக்கச்சொன்னார்கள். இந்த விவரத்தை நான் காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என் தம்பி இறந்துபோனதற்கு 10 மாதங்கள் முன்பு தான் முதலூரில் உள்ள கண்ணதாசன் வீட்டில் நடந்த சம்பவம் நடந்தது என்றால் சரிதான். 3ம் எதிரி எந்த ஊரில் வசிக்கிறார் என்றும், அவர் பெயர் என்னவென்று எனக்கு தெரியாது என்றும், சொன்னால் சரியல்ல. நான் நபிபாஷா என்னுடன் பேசிய செல்போன் எண்ணையும், ரொகாயாபீ நபிபாஷாவிடம் பேசிய செல்போன் எண்ணையும் காவல் துறை விசாரணையில் கொடுக்கவில்லை. எனது தம்பி கட்டப்பஞ்சாயத்துகளில் ஈடுபட்டு வந்ததால் அவருக்கு பல இடங்களில் முன்விரோதம் இருந்து வந்தது என்றும், எதிரிகளுக்கும் எங்களுக்கும் தேர்தல் தொடர்பாகவும் மற்ற பிரச்சனை தொடர்பாகவும் முன்விரோதம் இருந்ததால் இந்த

புகாரை பொய்யாக அளித்துள்ளேன் என்றும், 3ம் எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. புலன்கொள் குற்றம் என்றால் உடனே காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் அதுபோன்று சம்பவ இடம் சென்றவுடன் தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை நான் நேரடியாக காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன்.

**<u>(3ம் எதிரி மற்ற எதிரிகளின் குறுக்கு விசாரணையை தமதாக ஏற்றுக்கொள்கிறார்)</u>**

**<u>5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

புகாரை நான் காலதாமதமாக கொடுத்தேனா என்றால் இல்லை. உடனடியாக கொடுத்துவிட்டேன். நான் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். நான் எதில் கையெழுத்து போட்டேன் என்று நினைவில்லை. நான் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் என்னிடம் படித்துகாண்பித்தார்கள். அதில் 8வது காலத்தில் தகவல் கொடுப்பவரால் தாமதம் என கண்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் அன்றே பதிவு செய்யப்பட்டிருந்தாலும் மறுநாள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றும், எனவே இது அப்போது கொடுக்கப்பட்ட புகார் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் யார் என்று தெரியாது என்னும் வழக்குகளில் காவல் துறையினர் மோப்பநாயை வைத்து விசாரிக்கவேண்டும் என்றால் மோப்ப நாய் வந்ததாக சொன்னார்கள். ஆனால் நேரில் பார்க்கவில்லை. அது எங்கெங்கு போனது என்று எனக்கு தெரியாது. நான் புகாரில் இல்லாத விசயங்களை மறுவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அது குறித்து நேரடியாக தெரியாது. எனக்கு சம்பவத்தை குறித்து 20.07.2018க்கு முன்னர் தகவல் வந்தது. 20.07.2018க்கு இரண்டு, மூன்று நாட்கள் முன்பு தகவல் தெரியும். காவல் துறை விசாரணையில் யார் யார் இந்தெந்த விவரங்களை சொன்னார்கள் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் பெயர் தெரியாது. எனக்கு காவல் துறையினர் விசாரணை செய்த பிறகு தான் தகவல் சொன்னார்கள். அவர்களை காவல் துறையினர் விசாரித்தார்கள் யார் யார் தகவல் சொன்னார்கள் என்றால் நதிர்பாஷா, முருகன், பாவாடை, வீரன், ராமலிங்கம், அலாவுதின், பாவாஜான், ஆகியோர்கள்

சொன்னதாக போலீஸ் விசாரணையில் தெரிந்துக்கொண்டேன். விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு இரவு 9 மணிக்கு வந்தார்கள். மறுநாள் காலை 3 மணி வரை விசாரித்தார்கள். பார்வை மகசர் மின் விளக்கு வெளிச்சத்தில் எழுதினார்கள். பிரேத விசாரணையை சம்பவ இடத்தில் தான் செய்தார்கள். சம்பவ இடத்தில் நடந்த பிரேத விசாரணை அறிக்கையில் நான் சொல்லும் யாருமே சாட்சியம் கிடையாது என்றால் சரிதான். எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன சொன்னார்கள் என்று நான் கேள்விப்பட்டேன் அவ்வளவுதான். நான் எதிரிகள் மீதுள்ள விரோதத்தினால் கேள்விப்பட்ட தகவல்களை வைத்துக்கொண்டு புகார் அளித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மற்ற எதிரிகளின் குறுக்கு விசாரணையை 5ம் எதிரி தமதாக ஏற்றுக்கொள்கிறார்.)**

**மறுவிசாரணை இல்லை.**